8th November 1966]

புலவர் கா. கோவிந்தன் : காணுமல் போனவர்கள், இறந்தவர்களுடைய எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து வந்தவர்களாகத் தெரிகிறது. இந்த நிலைமை அந்த மாவட்டத்தின் வறுமையைக் காட்டுவதாக இருக்கிறதா ? அப்படியானுல் அங்கே வறுமையைப் போக்கக்கூடிய அளவில், வட ஆற்காடு மாவட்டத்தை வளம்படுத்த ஏதாவது திட்டங்கள் போடுவதற்கு முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வீரத்தைக் காட்டுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயிரைக் கொடுத்து நாட்டைப் பாதுகாத்த வீரர்களைப்பற்றி இம்மாதிரி கனம் அங்கத்தினர் பேசுவது அவதூருகும். ஏதோ கூலிக்குப் போகிருர்கள் என்று தெரியாதவர்கள் தான் சொல்வார்கள். இந்த மன்றத்திலுள்ள கனம் அங்கத்தினர் அவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற உணர்ச்சி இருந்தால் அந்த மாவட்டத்திலிருந்து அதிகமான பேர்கள் நாட்டைப் பாதுகப்பதற்காகச் சென்றிருக்கிருர்கள் என்பது பற்றிப் பெருமைப்பட வேண்டும்.

புதிய பஸ் வழிகள்

*503 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை to பெங்களூர் வேறு புதிய மார்க்கங்களில் அரசாங்க பஸ் விட உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த வழியாக ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) சென்னையிலிருந்து ராணிப்பேட்டை, சித்தூர், பலமனேர் வழியாக பெங்களூர் செல்லும் பஸ் வழித்தடத்தில் பஸ் விடுவதைப்பற்றி செயற்குறிப்பு ஆலோசனையிலுள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்பொழுது அந்த வழியாக போகக்கூடிய பஸ்களை சித்தூர், அரக்கோணம் வழியாக பெங்களூருக்கு விடுவதற்கு யோசனை உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னுல், எந்த வழியாகப் போகவேண்டும் என்பதும் சேர்த்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மின்சார வசதி

*504 கேள்வி.—**திரு. சோ. ஆறுமுகம்** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இளம்பிள்ளை கிராமப் பஞ்சாயத்துப் பகுதியிலும், சில கிராமங்களிலும் இன்னும் மின்சார வசதியளிக்காமல் இருப்பது உண்மையா ?

[8th November 1966

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

(உ) மேற்படி கிராமங்களுக்கு மின்சார வசதி எப்பொழுது அளிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) முதல் (உ) வரை: இளம்பிள்ளைக் கிராமத்திற்கு ஏற்கனவே மின்சார வசதியளிக்கப் பட்டுள்ளது. அக்கிராமத்தில் கூடுதல் மின்சார இணைப்புகளுக்கு மேலும் மின்வசதி வழங்குவதையும், சேலம், ஓமலூர், சங்கரி வட்டங்களைச் சுற்றிலுமுள்ள பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கு வதையும், நெய்வேலி—சேலம் உருக்காலை நிறுவப்படுவதற்கு மேற் சொன்ன பகுதியில் நில எடுப்பு செய்யவிருப்பதையொட்டி மேற் கொள்ள இயலவில்லை.

The Tamil answer is so difficult. I will read the answer in English.

திரு. சா. கணேசன் : டைப் அடித்தவர்கள் குழப்பம். தமிழ் 'டிபிகல்டு' இல்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : If the hon. Members are able to follow, I have no objection to read the Tamil answer.

(The Hon. Minister then read the rest of the Tamil answer.)

எனினும், அப்பகுதிகள் மேற்படி தொழிற்சாலை நிறுவுவதற்காக நில எடுப்பு செய்யப்படும் வரையில் மின்சாரம் வழங்கப்பட்டுப் பயன்பெற வேண்டுமென்று அப்பகுதி மக்கள் விரும்புவதனாலும், அவ்வாறு விரிவு படுத்துவதற்காகும் செலவு முழுவதையும் அவர்களே ஏற்றுக்கொள்ள இசைந்துள்ளதாலும், அப்பகுதிக்கு மின்சார வசதியளிக்க, 1960, ஜூலை மாதத்தில் தமிழ்நாடு மின்சார போர்டு திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தின்படி, அவ்வாறு மின்சாரம் விரிவுபடுத்தப் படுவதற்காகும் செலவு முழுவதும் மின்சாரம் பயன்படுத்தவிருப்போர் ஒவ்வொருவருக்கும் அனுமதிக்கப்பட விருக்கும் மின் அளவின் விகிதாசாரத்திற்கேற்ப அவர்களே கொடுத்து விடுவார். அத்தகைய பங்குத் தொகைகள் வசூலிக்கப்பட்டு, அவசியமான உடன்படிக்கைகள் எழுதி முடிக்கப் பட்ட பின்னர், இத்திட்டங்களுக்கான பணிகளை மின்சார போர்டு மேற்கொள்ளும்.

I will real the answer in English also.

Elampillai Village is already electrified. But extension of electricity supply to additional loads in that village and to the surrounding areas in Salem, Omalur and Sankari Taluks could not be undertaken in view of the fact that the area is proposed to be acquired for the setting up of the Neyveli–Salem Steel Plant. However, as the public are anxious to avail themselves of power supply until the areas are actually acquired and are willing to meet the entire cost of the extensions, the Madras State Electricity Board has evolved in July 1966 a scheme for the extension of

8th November 1966]

electricity to the area. Under this scheme the entire cost of the extensions will be met by the prospective consumers in proportion to the load to be sanctioned for each work on the schemes will be taken up by the Electricity Board after the contributions are collected and necessary agreements are got executed.

திரு. சோ. ஆறுமுகம் : சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது இந்தப் பகுதியிலுள்ள மக்கள் மின்சாரம் கோரி அதற்காக சப்ளை சார்ஜ் பூராவையும் ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படிக் கோருகின்ற இளம்பிள்ளை கிராமத்தில் மட்டும் சிறு தொழில்கள் நடத்துகிறவர்கள் அப்படி ஆகக்கூடிய சார்ஜ்களை பூராவையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அதே போல இன்னும் 22,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவிருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களுக்கு விவசாயத்திற்கு சப்ளை கொடுக்கவும் தொழில்களுக்குப் போன்ற கண்டிஷனையே மேற்கொள்ள சர்க்கார் சொல்லுகிறது. விவசாய பம்பு செட்டுகளுக்கும் அதே கண்டிஷனில் கொடுப்பது என்பது சரியாக இருக்காது. ஆகவே, விவசாயத்திற்கு மட்டும் அந்த கண்டிஷனைத் தளர்த்தி, மின்சாரம் கொடுக்க சர்க்கார் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த நிலம் பூராவையும் சேலம்--நெய்வேலி திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப் போகிறோம். பம்பு செட்டுகள் வைக்கவேண்டாம் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். ஆனால், இடைவெளியாகிய ஒரு வருஷம் இரண்டு வருஷ காலத்தில் சிலர் தாங்களே வைத்துக்கொள்ளுகிறோம் என்றார்கள். அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் எக்ஸெப்ஷன் செய்து அனுமதி கொடுத்திருக்கிறோம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், ஏறக்குறைய 22,000 ஏக்கர் நிலங்களுக்கு மின்சார சப்ளை கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகமாகும். அந்த இடங்களில் விவசாயிகள் பூரா சார்ஜும் கொடுத்தால்தான் லைன் போடுவோம் என்கிறார்கள். இது நல்ல முடிவு இல்லை. உணவு உற்பத்தியை மனதில் கொண்டு அந்த இடங்களிலெல்லாம் மின்சாரம் எக்ஸ்டென்ஷன் செய்து, பிற்பாடு டிஸ்மாண்ட்லிங் சார்ஜை மட்டும் கொடுங்கள் என்று சொல்லி, வருஷா வருஷம் டிப்ரீசியேஷன் கொடுக்கச் செய்து அந்தப் பகுதிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காரைப் பொருத்த வரையில், ஒரு வருஷம், இரண்டு வருஷத்திற்குள்ளே திட்டம் மேற்கொள்ளப் பட்டுவிடும் என்கிற நம்பிக்கை இருப்பதால். அந்தக் காலத்திற்குள்ளாக எரக்ஷன் செய்வது, பிற்பாடு டிஸ்மாண்டில் செய்வது என்கிற செலவுகள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வைப்பது சரியில்லை என்பதுதான் கருத்து. ஆனால், சிலர் தாங்களே எடுத்துக்கொண்டு செய்கிறோம் என்பவர்களுக்கு விலக்கு அளிக்கிறோம்.

[8th November 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அந்த கிராமத்திற்கு 'இளம்பிள்ளை' என்று பெயர் வரக் காரணம் என்ன என்று அறியலாமா ?

கனம் சபாநாயகர் : அதை அங்கே போய்க் கேட்கவேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யாராவது புலவர் இருந்தால் சொல்லலாம்.

தீப்பெட்டித் தொழிற்சாலை

* 505 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவகாசி சேம்பர் ஆப் மேட்ச் இன்டஸ்ட்ரீசிலிருந்து 2—9—1965 தேதியிட்ட முறையீடு வந்ததா ?

(இ) அம்முறையீட்டில் என்னென்ன கோரிக்கைகள் அடங்கி யிருந்தன ?

(உ) அம்முறையீட்டின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் (அ) முதல் (உ) வரை சபையில் ஒரு விவர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், நம்முடைய ராச்சியத்தின் தீப்பெட்டி தொழில் அபிவிருத்திக்காக, அதற்கு வேண்டிய கெமிகல்கள் எல்லாவற்றையும் தயார் செய்ய தொழில் கூட்டுறவு ஸ்தாபனம் நிறுவப்பட இருக்கிறதா, அதற்கான ஏற்பாடுகள் எந்த நிலையில் இருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி எக்ஸைஸ் ட்யூடி பற்றியும், மேச் டாக்ஸ் பற்றியும் ஆனது. அதிலிருந்து இந்த உப கேள்வி எழாது என்று கூற விரும்புகிறேன்.

Servicing Corporation

* 506 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the action taken and the procedure followed for the equitable distribution of the raw materials procured by the Servicing Corporations in the State, to the bona fide industries in dire need?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சபைமுன் விவர அறிக்கை [b] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் சர்வீசிங் கார்ப்பொரேஷன் மூலப் பொருள்கள் எப்படி வினியோகம் செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்

a Printed as Appendix VII on page 726–727.

b 727–721-ம் பக்கங்களில் எட்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.